<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2023−ம் ஆண்டு ஜூலை மாதம் 03−ம் நாள் திங்கள் கிழமை

<u>இடைநிலை மனு எண்.5/2022</u>

இன்

<u>இடைநிலை மனு எண்.4/2021</u>

<u>இன்</u>

<u>அசல் வழக்கு எண்.750/2019</u>

1. அய்யம்மாள்
2. ராஜா .....மனுதாரர்கள்/1,3 பிரதிவாதிகள்

/எதிர்/

பிச்சைபிள்ளை ....எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 26.06.2023−ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள்/1,3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. முகமது இலியாஸ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G.சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது அசல் வழக்கில் கடந்த 09.03.2022ம் தேதியன்று இ.ம.எண்.4/2021ல் எதிர்மனுதாரர் வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுக்காமையால் தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து நடத்த மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 72 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மனுவினை ஏற்றுக்கொள்ள வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி என்றும், தனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தங்களுக்கு எதிராக கடந்த 24.04.2019 அன்று ஒருதலைப்பட்ச உத்தரவு ஏற்பட்டிருந்தது என்றும், அந்த உத்தரவை ரத்து செய்ய எதிர்வழக்குரையுடன் மனு தாக்கல் செய்ததாகவும், அம்மனு 4/2021 என்று பதிவாகி எதிர் தரப்பு வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுக்க கடந்த 09.03.2022 அன்று வாய்தா

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.07.03 17:15:58 +0530

ஏற்பட்டதாகவும், மேற்கண்ட சங்கதிகளை தெரிவித்து தனது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராக கூறியிருந்தார் என்றும், கடந்த 09.03.2022 அன்று தனது வயோகத்தின் காரணமாக உடல்நிலை சரியில்லாததால் தன்னால் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர் வழக்கறிஞர்க்கு அறிவிப்பு கொடுக்க இயலவில்லை என்றும், தனது உடல்நிலை தேறிய பின்பு வழக்கறிஞரை சந்தித்து வழக்கின் விபரங்களை கேட்டபொழுது மேற்கண்ட மனு 09.03.2022 அன்று தள்ளுபடியான விபரத்தை தெரிவித்ததாகவும், தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தக்க சமயத்தில் தனக்கு எதிராக தள்ளுபடியான மனுவை கோப்பில் எடுக்க மனு தாக்கல் செய்ய காலதாமதம் ஏற்பட்டது என்றும், இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே தள்ளுபடியான மனுவை மீண்டும் கோப்பில் எடுத்து நடத்த மனு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட 72 நாட்கள் காலதாமத்தினை மன்னித்து இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என்றும், இல்லையே தனக்கு பெருத்த நஷ்டமும், கஷ்டமும் ஏற்படும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>

மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்தும், 24.04.2019 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பின்னிட்டு பல வாய்தாக்கள் தேதி மாற்றி பின்னிட்டு எதிர்மனுதாரர்/வாதி தன்னுடைய முதன்மை வாக்குமூலத்தினை தாக்கல் செய்து, பின்னிட்டு வாதுரைக்காக போடப்பட்டிருந்த வழக்கில் மனுதாரர்கள்/1,3 பிரதிவாதிகள் ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்ய வேண்டி, மனு தாக்கல் செய்து எதிர்மனுதாரர்/வாதிக்கு அறிவிப்பு கொடுக்காததால் ஐ.ஏ.எண்.4/2022 எதிர்மனுதாரர்/வாதிக்கு அறிவிப்பு கொடுக்காததால் மேற்படி மனுவானது 09.03.2022 ல் தள்ளுபடி ஆகிவிட்டது என்றும், 08.02.2021 ல் மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி, மனு தாக்கல் செய்துவிட்டு எதிர்தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்க வேண்டி 26.03.2021, 11.06.2021, 25.08.2021, 29.09.2021, 29.10.2021, 24.11.2021, 22.12.2021, 05.01.2022 ஆகிய தேதிகளில் பல வாய்ப்புகள் கொடுத்தும், மனுதாரர்கள்/1,3 பிரதிவாதிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்றும், வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும்,

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.07.03 17:16:08 +0530

காலம் கடத்த வேண்டும் என்ற நோக்கத்திலும் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,
" மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

6. தீர்வு

மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலித்த வகையில் அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து பொறுத்து நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், அதில் மனுதாரர்களுக்கு போதுமான வாய்ப்பளித்தும், அவர்களுக்காக வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்துள்ள நிலையில், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தால் தோன்றாதரப்பினராக்கப்பட்டு 24.04.2019ம் தேதி உத்தரவிடப்பட்டுள்ளதும், அவ்வுத்தரவினை ரத்து செய்ய உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழ் இம்மனுதாரர்கள் இ.ம.எண்.4/2021 தாக்கல் செய்து அம்மனுவில் எதிரி தரப்பினருக்கு அறிவிப்பு கொடுக்க வாய்தா அளித்திருந்த நிலையில் மனுதாரர்கள் அறிவிப்பு கொடுக்காத காரணத்தால் 09.03.2022ம் தேதி மேற்படி இ.ம.எண்.4/2021 தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளதும், மேற்படி மனுவில் ஏற்பட்ட உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 72 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை ஆராய்கையில், மனுவில் காரணமாக மனுதாரருக்கு வயோகத்தின் காணமாக உடல்நிலை சரியில்லாததால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலத்தில் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்று மனுவில் கூறியுள்ளதை எதிர்மனுதாரர் தரப்பில் மறுத்தும், உடல்நிலை சரியில்லை என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும், அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினராக உத்தரவிடப்பட்டு அதனை ரத்து செய்ய மனு தாக்கல் செய்துவிட்டு அந்த மனுவின் அறிவிப்பினை எதிர் தரப்பினருக்கு அறிவிப்பு கொடுக்க சுமார் 8 வாய்தாக்கள் ஒரு வருட காலம் வாய்தா அளித்துள்ள நிலையில், மனுதாரர் சுமார் 10 மாதம் முழுவதும் உடல்நிலை சரியில்லாமல் என்பதற்கு ஆவணங்கள் எதையும்

தாக்கல் செய்யாமல் கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றும், காலத்தை கடத்த வேண்டும் என்ற அடிப்படையிலேயே மேற்படி இ.ம.எண்.4/2021 சுமார் 5 ஆண்டுகள் காலம் கடந்து தாக்கல் செய்துவிட்டு தற்போது அம்மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனு செய்வதில் 72 நாட்கள் காலதாமதம் ஆகிவிட்டது என்று கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்று எதிருரை தாக்கல் செய்ததை ஆராய்கையில், பொதுவாக வழக்கின் ஒவ்வொரு நாள் காலதாமதத்திற்கும் உரிய காரணம் மனுதாரரால் சொல்லப்பட வேண்டும் என்ற பல்வேறு முன்தீர்ப்புரைகளில் சுட்டிக் காட்டியுள்ள நிலையில் இம்மனுதாரர்கள் சுமார் 10 மாதம் முழுவதும் உடல்நிலை சரியில்லாமல் என்பதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யாமலும், மேலும் அசல் வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு சுமார் 5 ஆண்டுகள் காலம் கடந்து மேற்படி இ.ம.எண்.4/2021 தாக்கல் செய்துவிட்டு அம்மனுவிலும் எதிர்தரப்பினருக்கு அறிவிப்பு கொடுக்க சுமார் 10 மாதம், 8 வாய்தாக்கள் அளிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுக்காமல் இருந்துள்ளதும், மேற்படி மனுதாரர்களின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் அதனை ரத்து செய்ய உரிய காலத்திற்குள் மனு செய்யாமல் 72 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளது என்பது மனுதாரர் தன் வழக்கின் மீது உரிய அக்கறையின்றி இருந்துவந்துள்ளார் என்பது மேற்படி வழக்கின் வரலாற்றை (Hearing of History of case) பார்த்ததிலிருந்து அறிய முடிகிறது. மேலும் 72 நாட்கள் காலதாமத்திற்கான காரணத்தை நிரூபிக்கின்ற வகையில் எந்த ஆவணங்களையும், வாய்மொழி சாட்சியங்களையும் மனுதாரர் தாக்கல் செய்யாததும், மனுவில் காலதாமத்திற்கு கூறப்பட்ட காரணத்தை மனுதாரர் நிரூபிக்கவில்லையென்றும் மனுவை அனுமதிக்க மனுதாரர் கூறியுள்ள காரணம் ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதியும், மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையிலும், மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று கருதி செலவுத்தொகையின்றி இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023–ம் ஆண்டு ஜூலை மாதம் 03–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM

Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.07.03 17:16:30 +0530

S P PARVADHRAJ ARUMUGAM

Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.07.03 17:16:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

S P PARVADHRAJ ARUMUGAM

Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.07.03 17:16:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.